**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அறந்தாங்கி**

**முன்னிலை: திருமதி.V.சிவகாமசுந்தரி., பி.ஏ.,பி.எல்.,**

**மாவட்ட உரிமையியல் நீதிபதி, அறந்தாங்கி.**

2026 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 02-ம் நாள் திங்கள்கிழமை

**IA No.02/2025**

**In**

**O.S No.75/2019**

ஆறுமுகம் ........**மனுதாரர்/பிரதிவாதி**

**//எதிர்//**

1) ராதாகிருஷ்ணன்,

2) செல்லையா (இறந்தார்),

3) வீரையா,

4) ஆண்டியப்பன்,

5) நாகம்மாள் (பொதுக்குடும்ப மேலாளர்
என்ற முறையில்),

6) செல்லம்மாள்,

7) சிவபாக்கியம்,

8) கார்மேகம்,

9) முருகன்,

10) சுரேஷ்,

11) சித்ரா,

12) மஞ்சுளா, .......**எதிர்மனுதாரர்கள்/ வாதிகள்**

இந்த மனுவானது இந்த நீதிமன்றத்தில் என் முன்பாக இறுதியாக விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.பெ.செ.சிவராசு.,B.Com.,B.L., அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.கை.வீரமணி.,M.A.,B.L., அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதுரைகள் கேட்கப்பட்டும், இந்த மனு சம்பந்தப்பட்ட அனைத்து ஆவணங்களும் இந்த நீதிமன்றத்தினால் நன்கு கவனமாக பரிசீலனை செய்யப்பட்டும், இந்நாள் வரையில் என் சீரான பரிசீலனையில் இருந்து, இன்று இந்த நீதிமன்றம் வழங்கும்.

**உத்தரவு**

இந்த மனுவானது மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் கூடுதல் சாட்சியாக ரெத்தினக்கோட்டை ஊராட்சி செயலாளர் மற்றும் உதவி மின் செயற்பொறியாளர், அறந்தாங்கி ஆகியோர்களை விசாரணை செய்ய வேண்டி கட்டளை 16 விதி 01-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. மனுவின் சுருக்கம்:-**

இந்த அசல் வழக்கானது உரிமைவிளம்பல் மற்றும் நிரந்தர தடையாணை பரிகாரம் கோரி எதிர்மனுதார்/வாதியால் வழக்கு தாக்கல் செய்து நிலுவையில் இருந்து வருகின்றது. மேற்படி வழக்கும் இன்று மனுதாரர் தரப்பில் கூடுதல் சாட்சிகள் விசாரணைக்கு வாய்தா போடப்பட்டுள்ளது. மேற்படி வழக்கு சொத்தில் உள்ள வீட்டிற்கான வீட்டு வரிவிதிப்பானது மனுதாரர் தந்தை பெயரில் உள்ளது என்பதை மெய்ப்பிப்பதற்காக ரெத்தினக்கோட்டை ஊராட்சியில் பராமரித்து வரும் வீட்டு வரி விதிப்பு வீட்டின் பழைய கதவு எண்.61, புதிய கதவு எண்.69 யார் பெயரில் வரி விதிப்பு செய்யப்பட்டுள்ளது. அதுவும் எந்த ஆண்டிலிருந்து வரி விதிப்பு செய்யப்பட்டுள்ளது என்பது தொடர்பான பதிவேட்டின் பதிவுகளுடன் சாட்சியம் அளிப்பதற்கு ஊராட்சி செயலர் அவர்களையும், வழக்கு சொத்தில் உள்ள மின் இணைப்பு எண். SCN 152 என்ற மின் இணைப்பு யார் பெயரில் பெறப்பட்டுள்ளது என்பது தொடர்பாக சாட்சியம் அளிப்பதற்கு இயக்கலும், காத்தலும், மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம், அறந்தாங்கி உதவி செயற்பொறியாளரையும் மனுதாரர்/பிரதிவாதி தரப்பு சாட்சியாக விசாரணை செய்ய வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக கட்சி செய்யப்பட்டுள்ளது.

**2. எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்த எதிருரை ஆட்சேபனையின் சுருக்கம் :-**

மனுதாரர்/பிரதிவாதி தனது வழக்கிற்கு ஆவணங்களையும், சாட்சிகளையும் ஏற்கனவே தாக்கல் செய்து முழுமையாக சாட்சியமும் அளித்துள்ளார். தற்போது ஊராட்சி செயலாளர், ரெத்தினக் கோட்டை அவர்களையும், உதவி செயற்பொறியாளர், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம், அறந்தாங்கி அவர்களையும் சாட்சியாக விசாரிக்க வேண்டிய அவசியம் எதுவும் இந்த வழக்கிற்கு தேவையில்லை. வேண்டுமென்றே இந்த வழக்கு விசாரணையை காலதாமதப்படுத்தி இழுத்தடிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் இம்மனுவினை மனுதாரர்/பிரதிவாதி தாக்கல் செய்துள்ளார். மேற்படி நபர்கள் வாய்மொழி சாட்சியம் அளிப்பதால் இந்த வழக்கில் மனுதாரர்/பிரதிவாதிக்கு நல்ல கட்சி ஏதும் ஏற்படப்போவதில்லை. எவ்வகையில் பார்த்தாலும் இம்மனு ஏற்புடையது அல்ல.

எனவே மனுதாரரின் இந்த மனுவை இந்த எதிர்மனுதாரர்கள்/வாதிகளின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டி கட்சி செய்யப்பட்டுள்ளது.

**3. தற்போது இம்மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய முக்கிய சங்கதி யாதெனில் இம்மனு அனுமதிக்கத்தக்கதா இல்லையா? என்பதாகும்.**

இந்த மனுவானது மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் வழக்கு சொத்திலுள்ள வீட்டிற்கான வரிவிதிப்பு ரசீது மற்றும் மின்இணைப்பு சம்மந்தமாக சாட்சியம் அளிப்பதற்கு கிராம ஊராட்சி செயலாளர் அவர்களையும், தமிழ்நாடு மின்சார வாரிய உதவி பொறியாளரையும் சாட்சிகளாக விசாரணை செய்ய வேண்டுமென்றும் கட்சி செய்யப்பட்டுள்ளது.

எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிருரையில் மேற்படி சாட்சிகளை விசாரிக்க வேண்டிய அவசியம் இல்லை என்றும், வழக்கு விசாரணையை காலதாமதப்படுத்த வேண்டும் என்பதற்காக இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக கட்சி செய்யப்பட்டுள்ளது.

தாவா வழக்கானது எதிர்மனுதாரர்/வாதிகளால் உரிமைவிளம்பல் மற்றும் அதனை தொடர்ந்த நிரந்தரதடையாணை பரிகாரத்திற்காக தொடரப்பட்டுள்ளது. வழக்கு சொத்தின் சட்டப்பூர்வமான சுவாதீனத்தில் யார் உள்ளார் என்பது பொறுத்து தீர்வு மனுதாரர் குறிப்பிட்டுள்ள சாட்சி விசாரணை அத்தியாவசியமானது என்று இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது. எனவே இம்மனு அனுமதிக்கத்தக்கது என்று இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

முடிவாக இம்மனு செலவுத்தொகையின்றி அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு பின் அவரால் நேரடியாக கணினி சாதனத்தில் பதிவு செய்யப்பட்டு பின் என்னால் பிழைகள் திருத்தம் செய்யப்பட்ட பின்னர் இன்று 2026-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 02-ம் நாள் என்னால் கையொப்பம் செய்யப்பட்டு இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

**ஒம்/-V.சிவகாமசுந்தரி**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**அறந்தாங்கி.**

**<u>சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் பட்டியல்:-</u>**

**<u>மனுதாரர் தரப்பு சாட்சி :-</u>** இல்லை

**<u>மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள் :-</u>** இல்லை

SIVAGAMASUNDARY V

Digitally signed by SIVAGAMASUNDARY V
Date: 2026.02.02 15:18:56 +0530

**எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி** :- இல்லை

**எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்** :- இல்லை

**//உண்மை நகல்//**

SIVAGAMASUNDARY V

Digitally signed by SIVAGAMASUNDARY V
Date: 2026.02.02 15:18:46 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**அறந்தாங்கி.**

**வரைவு/செவ்வை உத்தரவு**

**I.A.No.02/2025**

**O.S.No. 75/2019**

**நாள். 02.01.2026**

**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,**

**அறந்தாங்கி.**